சென்னை விமான நிலையத்தில்

# மெட்ரோ ரெயில் பயணிகள் வசதிக்காக டிஜிட்டல் அறிவிப்பு பலகை

சென்னை, நவ.18–

சென்னை விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து பன்னாட்டு மற்றும் உள்நாட்டு விமான நிலையத்துக்கு நேரடியாக செல்லும் வகையில் இணைப்பு பாலம் உள்ளது. ஆனால் விமான நிலையத்தில் இருந்து மெட்ரோ ரெயில் நிலையம் செல்லும் பயணிகளுக்கு ரெயில்கள் எந்த நடைமேடையில், எத்தனை மணிக்கு வந்து செல்லும் என்பது போன்ற விபரங்கள் தெரியாமல் அவதி அடைந்தனர்.

இதையடுத்து சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம், விமான நிலைய ஆணையத்துடன் இணைந்து பயணிகள் வசதிக்காக சென்னை விமான நிலையம், மெட்ரோ ரெயில் நிலைய இணைப்பு பாலத்தில் டிஜிட்டல் அறிவிப்பு பலகையை அமைத்து உள்ளது.

இதில் எந்த பகுதிக்கு செல்லும் மெட்ரோ ரெயில்கள் எந்த நடைமேடையில், எத்தனை மணிக்கு வந்து, எத்தனை மணிக்கு புறப்பட்டு செல்லும் என்பது போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டு உள்ளது. இதன் மூலம் விமான நிலையத்தில் இருந்து மெட்ரோ ரெயில் நிலையம் செல்லும் பயணிகள் பயன் அடைவார்கள்.

முதல்கட்டமாக சென்னை விமான நிலையத்தில் இந்த டிஜிட்டல் அறிவிப்பு பலகை அமைக்கப்பட்டு உள்ளது. இதேபோல் பிற மெட்ரோ ரெயில் நிலையங்கள் அருகில் உள்ள பஸ் நிலையங்கள் உள்ளிட்ட இடங்களிலும் டிஜிட்டல் அறிவிப்பு பலகை வைக்கப்பட உள்ளதாக மெட்ரோ ரெயில் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர்.